### சங்கரன்கோவிலில்

# வணிகவரித்துறைக்கு ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகம்: முதலமைச்சர் காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார்

## கலெக்டர் கமல்கிஷோர், ராஜா எம்எல்ஏ பங்கேற்பு




சங்கரன்கோவில். ஆக.1

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் வணிகவரித்துறைக்கு அரசின் சொந்த கட்டிடம் ரூபாய் 1. 82 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டது. அதனை தலைமை செயலகத்தில் இருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் காணொளி காட்சி மூலம் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடந்தது.

சங்கரன்கோவிலில் நடந்த வணிகவரித்துறை அலுவலகம் திறக்கும் நிகழ்ச்சிக்கு மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் தலைமை வகித்தார். தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜா எம்எல்ஏ முன்னிலை வகித்தார். தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின், தமிழ்நாடு வணிகவரி மற்றும் பத்திரங்கள் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி முன்னிலையில் சங்கரன்கோவில் வணிகவரித்துறை அலுவலகத்தை காணொளி காட்சி மூலம் திறந்து வைத்தார். தொடர்ந்து குத்து விளக்கு ஏற்றும் நிகழ்ச்சி நடந்தது. அதனைத் தொடர்ந்து மாவட்ட கலெக்டர் கமல் கிஷோர் மற்றும் ராஜா எம்எல்ஏ ஆகியோர் புதிய கட்டிடத்தை பார்வையிட்டனர். இந்த நிகழ்ச்சியில் திருநெல்வேலி கோட்ட வணிக வரி இணை ஆணையர் முருககுமார், இணை ஆணையர் நுண்ணறிவு பிரிவு தானுப்பிரியா, தென்காசி மாவட்ட வணிகவரி துணை ஆணையர் கீதா, திருநெல்வேலி வணிகவரி துணை ஆணையர் நுண்ணறிவு பிரிவு மாசிலாமணி, சங்கரன்கோவில் கோட்டாட்சிதலைவர் கவிதா, சங்கரன்கோவில் வணிகவரி அதிகாரி பார்வதி, பொதுப்பணித்துறை உதவி நிர்வாக பொறியாளர் ஜான்ஆசீர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் எடிசன், திமுக முன்னாள் அமைச்சரும் , இந்து சமய அறநிலைத்துறை உயர்மட்ட குழு உறுப்பினர் தங்கவேலு, சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், சங்கரன்கோவில் நகரச் செயலாளர் பிரகாஷ், ஒன்றிய செயலாளர்கள் பெரியதுரை, பால்ராஜ்,சங்கரன்கோவில் நகர வட்டார வர்த்தக கணக்காளர்கள் சங்க தலைவர் சுப்பையா, செயலாளர் முனீஸ்வரன், பொருளாளர் செந்தில்குமார், உறுப்பினர்கள், சங்கரநாராயணன், சபரி, நகர வர்த்தக சங்க நிர்வாகிகள் சின்னசாமி, குருநாதன், வேணுகோபால், முத்துமணி,, பிஎஸ்ஆர் விக்னேஷ், திமுக சார்பு அணி துணை அமைப்பாளர்கள் சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஜலால், இளைஞரணி ராஜராஜன், தகவல் தொழில்நுட்ப அணி சிவசுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதி டைட்டஸ், முன்னாள் வர்த்தக அணி பத்மநாபன், சங்கரன்கோவில் துணை மாநில வணிகவரி அலுவலர்கள் கணேசன், ஜெயராஜ் ஆய்வாளர் சங்கர் மற்றும் தலைவர் பாண்டியன், பாலாஜி, ஜெயக்குமார், மாரியப்பன் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



**தென்காசியில் பாஜக புதிய கிளை அமைத்த நிகழ்வின் போது பாஜக தென்காசி மாவட்ட துணைத்தலைவர் முத்துக்குமார் கலந்து கொண்டு சிறப்பித்தார்.**



**தென்காசி மாவட்டம் கடையநல்லூர் வட்டம் கருப்பாநதி அணைப்பகுதியினை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுதிமொழிக் குழு தலைவர் வேல்முருகன் தலைமையில், மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், முதன்மை செயலாளர் முனைவர் சீனிவாசன், சட்டமன்ற உறுதிமொழிக் குழு உறுப்பினர்கள் அருள் (சேலம் மேற்கு), தளபதி (மதுரை வடக்கு), நல்லதம்பி (திருப்பத்தூர்), மாங்குடி (காரைக்குடி), மோகன் (அண்ணாநகர்), ஜெயக்குமார் (பெருந்துறை) ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.**

### தென்காசி மாவட்டத்தில்

# நலவாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஓட்டுநர்கள் ஆட்டோ மானியம் பெற விண்ணப்பிக்கலாம்: கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி,ஆக.01-

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற பெண் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு 1 இலட்சம் மானியம் வழங்குதல்.தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாரா தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் பணி நிலைமைகளை ஒழுங்குபடுத்தவும், அவர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்கவும், தமிழ்நாடு அரசு 1982 ம் ஆண்டில் தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணிநிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டத்தினை இயற்றியது. மேலும் உடலுழைப்புத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் பொருட்டு கடந்த 1999ம்ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நல வாரியம் உருவாக்கப்பட்டது-

அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியம் உட்பட 20 நல வாரியங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்டி 18 முதல் 60 வயதுக்குட்பட்ட அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்து கொள்ளலாம்.

மேற்படி நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு , கண்கண்ணாடி, இயற்கை மரண உதவி, விபத்து மரண உதவி மற்றும் ஓய்வூதியம் போன்ற நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், அண்மையில் தமிழ்நாடு அரசின் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் 16,06,2022 அன்று வெளியிடப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுதுபார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 60 வயது பூர்த்தியடையாத பெண் ஓட்டுநர்களுக்கு ஆட்டோ மானியம் வாங்குவதவற்கு (ஒரு இலட்சம் மட்டும்) மானியம் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் சேருவதற்கு http://www.tnuwwb.tn.gov.in/என்ற இணையதள முகவரியில் விண்ணப்பித்து பயன் பெறலாம்.

மேலும், கூடுதல் விவரங்களுக்கு, தொழிலாளர் உதவி ஆணையர்,(சமூக பாதுகாப்புத் திட்டம்),275, பிரதான சாலை,தென்காசி – 627811என்ற அலுவலகமுகவரியிலும், 04633 – 214606என்ற தொலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்என மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தெரிவித்துள்ளார்.



**உங்களுடன்ஸ்டாலின்நிகழ்ச்சியைதென்காசிதெற்குமாவட்டம்வீராணம்பகுதியில்மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் சேக் முகம்மது, ஆலங்குளம் ஒன்றிய குழு தலைவர் திவ்யா மணிகண்டன், கிளை செயலாளர்கள் பாலசுப்பிரமணியன்,கோபால்,ஒன்றிய நிர்வாகிகள் மைதீன் வெள்ளத்துரை,இருதாலய பாண்டியன், வஹாப், முஸ்தபா கமல், முகமது அலி, நைனார், அன்சார் அலி, எஸ் கே சதாம் கலந்து கொண்டனர்.**

# ட்ரஷர் ஐலண்ட் பள்ளியில் ஆங்கில மொழி புலமைக்குழு



செங்கோட்டை ஆக.01

ட்ரஷர் ஐலண்ட் பள்ளியில் ஆங்கில மொழியை பேச்சு மொழியாக மாணவர்கள் பேசுவதற்கு லிங்குவாலிஃப்ட் என்னும் அமைப்பு தொடங்கப்பட்டது. மாணவர்களிடையே ஆங்கில மொழிப்புலமையை மேம்படுத்தவும், எப்போதும் ஆங்கில மொழியிலேயே உரையாடவும் இவ்வமைப்பு தொடங்கப்பட்டது. இவ் அமைப்பு கடந்த ஜூன் ஜூலை மாதங்களில் ஆங்கில மொழியை மட்டுமே பேசிய மாணவர்களுக்கு பள்ளியின் முதல் மாணவன், முதல் மாணவி, ஒருங்கிணைப்பாளர்கள், குழு தலைவர்கள் என பல்வேறு சிறப்பு பெயர்களை சூடி பாராட்டு சான்றிதழும் வழங்கியது. பள்ளியில் நடத்தப்பட்ட பல்வேறு வகை போட்டிகளில் பங்கு பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. மாணவர்கள் உற்சாகமாக இந்நிகழ்ச்சியில் பங்கு பெற்றனர். நிகழ்ச்சியில் நடைபெற்ற உரையாடல், நாடகம் போன்றவற்றை கண்டுகளித்தனர். நிகழ்ச்சியை பள்ளி தாளாளர் ஷேக் செய்யது அலி, பள்ளி முதல்வர் சமீமா பர்வீன் ஆகியோர் தலைமையேற்று பரிசுகளை வழங்கி பாராட்டினர்.



**கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் ஆர்.அழகுமீனா மகாமதி சதாவதானி செய்குதம்பி பாவலர் 151-வது பிறந்தநாளை முன்னிட்டு, நாகர்கோவில், இடலாக்குடியில் அமைந்துள்ள நினைவு மண்டபத்தில் அவரது திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர்என்.சுரேஷ் ராஜன், மேயர் ரெ.மகேஷ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.**




**தென்காசி மாவட்டம் கடையநல்லூர் நகராட்சியில் இரண்டாம் கட்டமாக 19வது வார்டு மற்றும் 20 வது வார்டுகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு குறை தீர்க்கும் முகாமினை நகரமன்ற உறுப்பினர்கள் அக்பர்அலி, யாசர்கான் முன்னிலையில் கடையநல்லூர் நகரமன்ற தலைவர் மூப்பன் ஹபீபுர் ரஹ்மான், நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன் கலந்து கொண்டனர்.**



**கோவில்பட்டி வி.எம்.எஸ்.நகரில் கடலை மிட்டாய் உற்பத்தியாளர்கள் இணைந்து சிறு குழுமம் அமைத்து அரசு நிதி உதவியோடு உற்பத்தி தொழிற்சாலை அமைக்க அடிக்கல் நாட்டு விழா நடந்தது. தொழிலதிபர் கே.என்.ஆர். கண்ணன், அனைத்து வணிகர் சங்கங்களின் பேரமைப்பு துணைச் செயலாளர் எஸ்.ஆர்.பாஸ்கர், திரைப்பட நடிகர் சேகர் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.**

# இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி கலைத்திறன் போட்டியில் மாவட்ட அளவில் சாதனை





குற்றாலம் ஆக.01

தூத்துக்குடி ஹோலி கிராஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில்,ஹோலி கிராஸ் பழைய மாணவர்கள் சங்கத்தினர் பள்ளி மாணவர்களுக்கு கலைத் திறன் போட்டியை மாவட்ட அளவில் நடத்தினர்.போட்டிக்கு பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி,எஸ். ஆர் பள்ளி,விகாஷா பள்ளி மற்றும் எஸ் . டி. ஆர். பள்ளி உள்ளிட்ட பல பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர்.இதில் இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கணிதவியல் போட்டியில் அத்வைத் முதலிடமும், வண்ணம் தீட்டுதல் போட்டியில் நிமலன், வினாடி வினா போட்டியில் சாய்குகந்த் ,நவ்பல் அகமது ஆகியோர் இரண்டாமிடமும், ஆங்கில பேச்சுப் போட்டியில் நிவேதன்,முகமூடி தயாரித்தல் போட்டியில் சலீனா அயனி, ஆங்கில கட்டுரைப் போட்டியில் நித்ய ஶ்ரீ,இளம் விஞ்ஞானி போட்டியில் ஜெயராம் ஆகியோர் மூன்றாமிடமும் பெற்று சாதனைப் படைத்தனர்.வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஹோலி கிராஸ் பள்ளி முதல்வர் சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி பாராட்டினார். ஹோலி கிராஸ் பள்ளி நடத்திய கலைத் திறன் போட்டியில் வெற்றி பெற்ற இலஞ்சி பாரத் வித்யா மந்திர் மேல்நிலைப் பள்ளி மாணவர்களை பள்ளி கல்விக் குழுமத் தலைவர் மோகனகிருஷ்ணன் செயலாளர் முனைவர் காந்திமதி மோகன கிருஷ்ணன் தொடக்கப் பள்ளி முதல்வர் வனிதா, மேல்நிலைப் பள்ளி முதல்வர் கிஃப்ட் சன் கிருபாகரன் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

# குற்றால அருவிகளில் பயணிகள் நீராடும் வசதியை ஏற்படுத்தி தர வேண்டும்: கலெக்டருக்கு தெற்கு மாவட்ட மதிமுக மாவட்ட செயலாளர் கோரிக்கை

**தென்காசி ஆக.01:**

தென்காசி தெற்கு மாவட்ட மதிமுக மாவட்ட செயலாளர் இராம உதயசூரியன் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் பொதிகை மலைக்கு பெருமை சேர்க்கும் குற்றால அருவிகள் சுற்றுலா பயணிகளுக்கு இயற்கை வழங்கிய கொடையாகும். உலகெங்கும் பெருமைபெற்ற நீர்வீழ்ச்சிகள் பல உண்டெண்றாலும் குறவஞ்சி கூறும் பெருமைக்கு பொருள்கொண்ட குற்றால அருவி தனிச்சிறப்பு பெற்றதாகும்.



தேனருவி திரையெழும்பி வானின்வழி ஒழுகும் என்பது எத்துணை உண்மை என்பதை இதில் நீராடி இன்பம் பெற்றோர் உணருகின்றனர். ஏழை நடுத்தர மக்களின் சுற்றுலா ஆசையை நிறைவேற்றும் பேருபெற்ற இந்தஅருவிகள் உலகம் வியக்கும் உன்னதத்தின் அடையாளம் ஆகும்.அகத்திய முனிவரும் சித்தர்கள் பலரும் உலாவிய இந்த திருவிடத்தால் ஒருங்கிணைந்த திருநெல்வேலி என்ற வரலாற்று பூமி பெருமைப்பட்டு இன்று தென்காசி மாவட்டத்திற்கு இந்த அருவிகள் மகுடம் சூட்டுகின்றன.மே மாதம் தொடங்கி ஆகஸ்ட் வரை இங்கு வந்து செல்லும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை கணக்கிட முடியாததாகும். ஆண்டுதோறும் தென்மேற்கு பருவ மழை காலத்தில் துவங்கும் சீசன் எல்லா ஆண்டுகளும் ஒரே போன்று அமைவதில்லை. ஆண்டுக்கு ஆண்டு வேறுபடும். மிக நீண்ட காலத்திற்கு பின் மிக அதிக அளவில் சீசன் களை கட்டுகிறது இந்த ஆண்டு.இதனால் இந்தியா மற்றும் அயல்நாட்டு சுற்றுலா பயணிகள் இங்கு வந்துள்ளார்கள். அவர்கள் மனதார நீராட வாய்ப்பு இல்லாத நிலையில் மிகவும் வருந்துகின்றனர். அருவியில் நீர் கொட்டினாலும் அதை அனுபவிக்க முடியவில்லை. இதனால் தொலை தூரத்தில் இருந்து வருவோர் ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை உள்ளது.இந்த குறையை போக்க மாற்று வழிகளை மாவட்ட நிர்வாகம் எடுத்தால் சிறப்பாக இருக்கும். அருவிகளின் நீர்வரத்தை கணக்கிட்டு பாதுகாப்பான பகுதிகளை கண்டறிந்து அந்த இடங்கள் வழியாக நீர்வழித்தடத்தை உருவாக்கி பாதுகாப்பை அதிகரித்து பயணிகள் நீராடும் வசதியை மாவட்ட நிர்வாகம் செய்து கொடுத்தால் மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவர்.அத்தோடு சுற்றுலா பயணிகளை நம்பி இங்கு வியாபாரம் செய்யும் குடும்பங்களும் இதனால் பயனடையும்.எனவே தாங்கள் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளார்

# கோவில்பட்டி நாடார் மேல்நிலைப்பள்ளியில் இலக்கிய மன்றம் தொடக்க விழா




**கோவில்பட்டி ஆக 01**

கோவில்பட்டி நாடார் மேல்நிலைப் பள்ளியில் இலக்கிய மன்ற தொடக்க விழா-2025. நாடார் மேல்நிலைப்பள்ளி செயலாளர் வழக்கறிஞர் ஜே. ரத்தினராஜா தலைமையில் நடந்தது.

உபதலைவர் செல்வராஜ், செயலாளர் ஜெயபாலன், பொருளாளர் சுரேஷ் குமார், நிர்வாக குழு உறுப்பினர்கள் ராஜேந்திர பிரசாத், செல்வராஜ், பத்ரகாளியம்மன் கோவில் திருக்கோயில் தர்மகர்த்தா மாரியப்பன், நாடார் நடுநிலைப்பள்ளி உறுப்பினர் இளங்கோ, ஐ சி எம் நடுநிலைபள்ளி உறுப்பினர் தாயப்பன், நாடார் மேல்நிலைப் பள்ளி பொருளாளர் விஜயகுமார், பள்ளி நிர்வாக குழு உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், சாமி ராஜன், வேல்முருகன், வெங்கடேஷ், ஆகியோர் முன்னிலை வைத்தனர்.

மாணவி அபிநயா வரவேற்புரை ஆற்றினார். மாணவி காமினி தெய்வானை ஆண்டறிக்கை வாசித்தார். பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. பள்ளி நிர்வாகத்தின் சார்பில் பரிசளிக்கப்பட்டது

விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பட்டிமன்ற பேச்சாளர் கவிதா ஜவகர் தமிழுக்கும் அமுதென்று பேர் என்ற பெயரில் சிறப்புரையாற்றினார். மாணவிகள் சித்ராதேவி, உவித்ரா, ஆகியோர் தொகுப்புரை ஆற்றினார்கள். நிகழ்ச்சியை பொறுப்புத் தலைமையாசிரியர் அருணாசலம் மேற்பார்வையில் அனைத்து தமிழ் ஆசிரியர்கள் ஏற்பாட்டில் முதுநிலை ஆசிரியர்கள் கு.செல்வம், ஆறுமுக கனி, வெள்ளைச்சாமி, ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். மாணவி நந்தினி நன்றி கூறினார்.

